சென்னை விமான நிலையத்தில் இருந்து

# வண்டலூர் கிளாம்பாக்கம் வரை மெட்ரோ ரெயில் பணிக்கு ஆய்வு

## எடப்பாடி பழனிசாமி தகவல்

சென்னை, பிப். 14–

நேரு ஸ்டேடியத்தில் நடந்த விழாவில் பிரதமர் நரேந்திரமோடி முன்னிலையில் முதல்– அமைச்சர் எடப்பாடி பழனிசாமி, பேசியதாவது:–

பிரதமர் நரேந்திர மோடியை கடந்த மாதம் 18–ந் தேதி டெல்லியில் சந்தித்த போது தமிழகத்தில் நலத்திட்ட பணிகளை தொடங்கி வைக்க வருமாறு அழைப்பு விடுத்தேன். எனது அழைப்பை ஏற்று இங்கு வந்துள்ள பாரத பிரதமருக்கு நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

### மெட்ரோ ரெயில்

சென்னை மாநகரத்தில் உள்ள போக்குவரத்து நெரிசலை கருத்தில் கொண்டு மறைந்த முதல்–அமைச்சர் ஜெயலலிதா மெட்ரோ ரெயில் திட்டத்திற்கு மிகுந்த முன்னுரிமை கொடுத்தார்.

மத்திய, மாநில அரசுகள் இணைந்து நிதி ஒதுக்கியதன் பேரில் சென்னையில் பல்வேறு வழித்தடங்களில் மெட்ரோ ரெயில் பயணம் மக்களுக்கு பேருதவியாக இருந்து வருகிறது.

### ஜெயலலிதா அடிக்கல்

தற்போது விம்கோ நகர் முதல் வண்ணாரப்பேட்டை வரையிலான மெட்ரோ திட்டத்தை பிரதமர் தொடங்கி வைத்தார். இந்த திட்டத்திற்கு கடந்த 2016–ம் ஆண்டு ஜெயலலிதா அடிக்கல் நாட்டியது குறிப்பிடத்தக்கது.

தற்போது விமான நிலையம் வரையில் மெட்ரோ ரெயில் இயக்கப்பட்டு வருகிறது. அங்கிருந்து வண்டலூர் கிளாம்பாக்கத்தில் அமைய உள்ள பஸ் நிலையம் வரையில் மெட்ரோ ரெயில் பணிகளை மேற்கொள்ள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கோவையிலும் மெட்ரோ ரெயிலுக்கான ஆய்வுப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

### கொரோனா

கொரோனா தடுப்பு பணியில் மத்திய அரசு மேற்கொண்ட தீவிர நடவடிக்கைகள் காரணமாக இன்று கொரோனா தொற்று குறைந்துள்ளது. தடுப்பூசிகளை வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து வருகிறோம். இந்த முயற்சிகளை தீவிரமாக மேற்கொண்டு வரும் பிரதமருக்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன்.

### நீர் மேலாண்மை

இன்று தொடங்கப்பட்டுள்ள பல்வேறு திட்டங்கள் மக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். குறிப்பாக நீர் மேலாண்மை திட்டங்களை தமிழக அரசு சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. அதற்கான விருதையும் மத்திய அரசிடம் இருந்து பெற்றுள்ளோம் என்பதையும் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி பேசினார்.